# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/49 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/49 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

**1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகள்**

1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகளின் 2 ஆம் ஒழுங்கு விதியினால் சனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அவரால் ஆக்கப்பட்ட கட்டளை.

வி. கொலவ்லவ,
சனாதிபதி.

நுவரெலியா,
1975 ஏப்பிறல் 19.

கட்டளை

1. இக்கட்டளை 1975 ஆம் ஆண்டின் அத்தியாவசிய சேவைகள் கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகளின் 2 ஆம் ஒழுங்குவிதியில் "அத்தியாவசிய சேவை" என்ற கூற்றின் வரைவிலக்கணத்தின் நோக்கத்திற்காக, கீழ்க்காணும் சேவைகள், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் அல்லது சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகள் என்று இத்தால் வெளியிடப்படுகிறது :—

(1) உண்ணும் அல்லது பருகும் பதார்த்தங்கள் வழங்கலும் பேணுதலும் பங்கீடு செய்தலும்.

(2) வாயு, பெற்றோலியப் பொருட்கள் உட்பட எரிபொருள் வழங்கலும் பங்கீடு செய்தலும்.

(3) மின்சாரம் வழங்கல்.

(4) பிரயாணிகளுக்கான அல்லது சாமான்களுக்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகள்.

(5) நீர் வழங்கல்.

(6) தபால், தொலைபேசி, தந்தி, ஒலிபரப்புச் சேவைகள்.

(7) கீழ்க்கண்டவை தொடர்பாகத் தேவைப்படும் அல்லது வேண்டப்படும் எவ்விதமாகவேனும் விவரிக்கப்படக் கூடிய சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில்கள்—

(அ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களிற்காக விவரிக்கப்பட்ட முறையிலுள்ள எந்தத் துறைமுகத்திலுள்ளும் உள்ள எந்தக் கப்பலிலிருந்தேனும் உணவு அல்லது பருகும் பதார்த்தங்கள், கரி எண்ணெய், எரிபொருள் ஆதியனவற்றைக் கப்பலிலிருந்து இறக்கல், கொண்டு செல்லல், தரையிலிறக்கல், களஞ்சியப்படுத்தல், ஒப்படைத்தல், கடத்தல் ;

(ஆ) தேயிலை, இறப்பர், தேங்காய் அல்லது அவற்றின் உபரிப் பொருட்களை நடுதல், உற்பத்தி செய்தல், ஆக்குதல், விற்பனை செய்தல், கப்பலேற்றுதல் அல்லது கப்பலேற்றுவதற்கெனக் களஞ்சியப்படுத்தல் ;

(இ) அரசாங்கத்தால் நடாத்தப்பட்டாலுஞ்சரி பிறவழியில் நடாத்தப்பட்டாலுஞ்சரி, வைத்தியசாலைகள், வைத்திய விடுதிகள், மருந்தகங்கள், மற்றும் இவையொத்த நிலையங்களை நடாத்துதலும், நோயாளிகளைச் சேர்த்தலும், கவனித்தலும், அவர்களுக்கு உணவளித்தலும் வைத்தியம் செய்தலும் ;

(ஈ) நீர்வழங்கல், மின்சாரம், வடிகாலமைப்பும் கழிகாலமைப்பும், தீயணைப்பு, நோயாளர் வண்டிச் சேவைகள், (மலம் அகற்றலும் அப்புறப்படுத்தலும் உட்பட) மலகூட, தோட்டி வேலைகள் ஆகியவற்றுக்காக ஏதேனும் உள்ளூராட்சி அதிகாரசபையினால் பேணப்பட்டுவரும் பொதுப் பேற்புப் பணிகள் ;

(உ) வீதிகள், பாலங்கள், மதகுகள், விமானத்துறைகள், துறைமுகங்கள், புகைவண்டிப் பாதைகள் உட்பட வீதி, புகைவண்டி அல்லது ஆகாயப் போக்குவரத்துச் சேவைகளுக்கான வசதிகளை நடாத்தலும் ஏற்பாடு செய்தலும்.

(8) எந்த அரசாங்கத் திணைக்களத்தினாலும் அல்லது அதன் கிளையினாலும் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள்.

(9) அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அதன் கிளை எதனுலாயினும் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள்.

(10) இலங்கை மத்திய வங்கியினாலும், இலங்கை வங்கியினாலும், வர்த்தக அல்லது நிதி தொழில் நடத்தும் வேறு எந்த வங்கியினாலும் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள்.

(11) எந்தவிதமாகவேனும் விவரிக்கப்படக்கூடிய பண்டங்களை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல், அல்லது பங்கீடு செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு வணிக அல்லது வர்த்தக முயற்சியினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள்.

(12) எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களினாலும் சமாசங்களினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகள்.

(13) பின்வரும் கைத்தொழிற் பொருள்களைப் பதப்படுத்தல், உற்பத்திசெய்தல் அல்லது விநியோகித்தல் அல்லது அத்தகைய பொருள்களைப் பதப்படுத்தல், உற்பத்திசெய்தல் அல்லது விநியோகித்தல் என்பனவற்றுக்கு தேவையான மூலப்பொருள்களை இறக்குமதிசெய்தல் அல்லது வழங்குதல் தொடர்பில் அவசியமான அல்லது செய்யப்படவேண்டியுள்ள எவ்வகையதுமான விவரணத்தையும் கொண்ட சேவை, வேலை அல்லது தொழில் யாவும்:—

(அ) உலர்த்திய பால் மா.
(ஆ) பறவைப் பண்ணை உணவும் விலங்குணவும்.
(இ) பனிக்கட்டி.
(ஈ) பருத்தி நூற் களியும் பருத்திப்புடவைகளும்.
(உ) வாயு நெய்யரி (மான்ரல்).
(ஊ) அசற்றலின் வாயு.
(எ) ஒட்சிசன் வாயு.
(ஏ) ஒளியூட்டும் மெழுகுவர்த்திகள்.
(ஐ) நெருப்புப் பெட்டிகள்.
(ஒ) வாகடப் பொருள்களும் மருந்துவகைகளும்.
(ஓ) சவர்க்காரம்.
(ஔ) பல்லுறைக் கடதாசிச் சாக்குகள்.
(க) பொலிதீன் சுருளினால் முழுமையாகவோ பகுதியாகவோ செய்யப்பட்ட கொள்கலன்கள்.
(ங) கண்ணடியினாற் செய்யப்பட்ட போத்தல்களும் வேறு கொள்கலன்களும்.
(ச) அலுமினியம் மென்தாளும் வரைப்பட்டைகளும்.
(ஞ) முட்கம்பி.
(ட) பொருத்தூசிகள்.
(ண) தகரத் தகடுகளாற் செய்யப்பட்ட கொள்கலன்கள்.
(த) மடிக்கக்கூடிய குழாய்கள்.
(ந) தேயிலைப் பெட்டிகளுக்கான உலோகப் பிணைச்சல்கள்.
(ப) கம்பி ஆணிகள்.
(ம) மின்சார பல்புகள்.
(ய) ஈருருளி ரயர்களும் ரியூப்புக்களும்.
(ர) ஒட்டுவதற்கான ரப்பர்க் கரைசல்களும் சிமெந்தும்.

(14) ஒழுக்கண்டவை தொடர்பாகத் தேவைப்படும் அல்லது வேண்டப்படும் எவ்விதமாகவேனும் விவரிக்கப்படக்கூடிய சேவை, அல்லது வேலை எல்லாம்—

(அ) அப்பேறல் எக்ஸ்போட்ஸ், ஹென்றலி கார்மென்றஸ் லிமிற்றெட், யூனேற்றெட் கார்மென்றஸ் இன்ரர்நஷனல் லிமிற்றெட் ஆகியவற்றுல் உடனடிப் பயன்பாட்டு உடைவகைகள் தொடர்பானதும், சிலோன் பென்சில் கொம்பனி லிமிற்றெட், எலிய பென்சில் கொம்பனி ஆகியவற்றுல் பென்சில்கள் தொடர்பானதுமான உற்பத்தி, விநியோகம், விற்பனை அல்லது ஏற்றுமதி ; அத்துடன்

(ஆ) அப்பேறல் எக்ஸ்போட்ஸ், ஹென்றலி கார்மென்றஸ் லிமிற்றெட், யூனேற்றெட் கார்மென்றஸ் இன்ரர்நஷனல் லிமிற்றெட் ஆகியவற்றுல் உடனடிப் பயன்பாட்டு உடைவகைகளையும், சிலோன் பென்சில் கொம்பனி லிமிற்றெட், எலிய பென்சில் கொம்பனி ஆகியவற்றுல் பென்சில்களையும் உற்பத்தி செய்தற்குத் தேவைப்படும் மூலப் பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல்.

3. இக்கட்டளையின் நோக்கங்களுக்காக—

(i) " உள்ளூராட்சி அதிகாரசபை " என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை எனப் பொருள்படும்.

(ii) " அரசாங்கக் கூட்டுத்தாபனம் " என்பது முழுமையும் அல்லது பகுதியாக மூலதனம் அரசாங்கத்தினால் உதவப்பெற்ற ஒரு கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்.

4. இக்கட்டளையானது, இலங்கை எங்கணும் ஏற்புடையதாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.